தெரிய அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஆட்டோ சங்கர் என்பவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராணி பத்மினி வழக்கில் தீர்ப்புச் சொன்னது மாதிரி ஒரு நினைவு.

திரு. எம். முகமது சித்திக் : அதேபோல் ஆட்டோ சங்கர் என்பவர் தொடர் கொலைகள் செய்ததாக பத்திரிகைகளில் செய்திகள் பத்தி பத்தியாக வந்துகொண்டிருந்தன. இதில் பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன. சில போலீஸ் அதிகாரிகள் சங்கர் வீட்டுக்குச் சென்று விருந்து சாப்பிட்டதாகவும் வீடியோ கேசட் கைப்பற்றப்பட்டதாகவும் .... (மணியடிக்கப்பெற்றது)........ சொல்கிறார்கள். எனவே அந்த நடவடிக்கையையும் துரிதப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன்.

எனது பகுதியில் தீயணைப்பு நிலையம் என்பதே இல்லை. நாகப்பட்டினம் செல்லவேண்டும் என்றால் 55 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மயிலாடுதுறை, சீர்காழி போன்றவை 40 மற்றும் 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றன.. அரசினுடைய கொள்கையின்படி 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கவேண்டும் என்று திட்டம் இருக்கிறது. எனவே என்னுடைய தொகுதியில் தரங்கம்பாடி தாலுக்காவில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

9. அரசினர் தீர்மானம்
விதி 32—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். .ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (28—4—1989-ஆம் தேதியன்று) தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (28-4-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

96. ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

97. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் 1986-87-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

98. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.].

99. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

100. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

101. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

135. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்).

!136. தமிழ்நாடு காவல் துறை மீதான ஆய்வுரை, 1988-89. (தமிழ், ஆங்கிலம்).

137. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90. (தமிழ், ஆங்கிலம்).